**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.**

**முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2020ம் வருடம் அக்டோபர் மாதம் 16 நாள்
சார்வரி ஆண்டு புரட்டாசி மாதம் 30ம் நாள் வெள்ளிக்கிழமை

**I.A . No. 380/2020**

**in**

**O.S. No.100/2013**

P. கார்த்தி

..... மனுதாரர்/பிரதிவாதி

M. பாலமுருகன்

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 03.03.2020ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K. சந்தனக்கருப்புச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.G.M. ரமணி அவர்கள் ஆஜராகியும், கடந்த 13.10.2020ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இம்மனு, உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி (3A) மற்றும் பிரிவு 151ன்படி, அசல் வழக்கிற்கு பிரதிவாதி தரப்பு ஆவணமாக மனுவில் கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய மனுதாரர்/பிரதிவாதிக்கு அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

அசல் வழக்கில் மனுதாரர் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கின் வாதியானவர் தாவா 1 வது அயிட்ட சொத்தில் எந்தவித கட்டுமான பணிகளும் மேற்கொள்ளக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் மனுதார்/பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி தரப்பில் சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் சாட்சிய விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலாததால், பி.வா.சா.1 நிரூபண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட

ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடுமாறு வேண்டப்பட்டது.

**<u>2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர் உரையின் சுருக்கம்:</u>**

எதிர்மனுதார்/வாதி அசல் வழக்கின் வாதி. அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ள நிலையில், மனுவில் கண்ட ஆவணங்களை மனுதார்/பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்ட ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னீடு உற்பத்தி செய்யப்பட்டவை என்பதோடு, தாவா வழக்கிற்கும் மேற்படி ஆவணங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதார்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.1 உயில் ஆவணம் மற்றும் பி.வா.2,3 தானசெட்டில்மெண்ட் ஆவணங்களில் எந்த ஆவணத்தின் அசல் வங்கியில் உள்ளது என்பதையும் அவ்வாறு வங்கியில் இருந்தால், அதற்கான வங்கி ஆதாரம் எதனையும் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் இரண்டாம் நிலை ஆவணங்கள் என்பதால், மேற்படி ஆவணங்களில் அசல் பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடாததால், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்படி வேண்டப்பட்டது.

3) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

**<u>தீர்வு:-</u>**

4) இந்த நிர் மனுக்களும் மனுதாரர்/பிரதிவாதியால் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்வதற்கு மேற்படி ஆவணங்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்படுவதை மன்னித்து ஏற்றுக்கொள்ளக் கோரியும் மேற்படி ஆவணங்களில் 1 முதல் 3 ஆவணங்கள் சான்றிட்ட நகல் ஆவணங்களாக தாக்கல் செய்யப்படுவதால், அவற்றை 2ம் நிலை சாட்சியங்களாக குறியீடு செய்ய அனுமதி வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதார்/பிரதிவாதி தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் தாவா சொத்தின் அமைப்பு மற்றும் எல்கையை நிர்ணயம் செய்வதற்கும் மனுதார்/வாதியின் அனுபவத்தினை நிர்ணயம் செய்வதற்கும் அவசியமானது என்றும் வாதுரைக்கப்பட்டது. மாறாக எதிர்மனுதார்/வாதி தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் வழக்கிற்கு பின்னீடு பொய்யாக உருவாக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணங்களில் 1 முதல் 3 ஆவணங்களின் அசல் தாக்கல் செய்யப்படாமல் சான்று நகல்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் ஆவணங்கள் வங்கி அடைமானத்தில் இருப்பதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதில் எந்த வங்கியில் என்று தெளிவாக குறிப்பிடவில்லை. எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென வாதுரைக்கப்பட்டது.

5) வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு

சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், பிரதிவாதி தரப்பு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, அதனுடன் இணைந்து இந்த இரண்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதை எதிர்மனுதார்/வாதி தரப்பில் மறுக்கவில்லை. மேலும் அசல் வழக்கு பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட சர்வே எண். 580க்குரிய புலப்பட நகல் மற்றும் நத்தம் நிலவரிதிட்ட தூய அடங்கல் பதிவேடு ஆகியவற்றை மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட 1 முதல் 3 வரையிலான ஆவணங்களுடன் ஒப்பிட்டு பரிசீலனை செய்யும்போது, மேற்படி அசல் வழக்கு பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி புலப்பட நகல் மற்றும் தூய அடங்கல் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண். 580 தொடர்பான ஆவணங்களே மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட 1 முதல் 3 வரையிலான பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்களாக மனுவுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட 4 முதல் 6 வரையிலான ஆவணங்கள் மனுதார்/பிரதிவாதி பெயரிலான மின் கட்டண ரசீதுகள் மற்றும் வீட்டு வரி ரசீதுகள் ஆகும். மேற்படி மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட 1 முதல் 3 வரையிலான ஆவணங்களின் அசல் வங்கியில் அடைமானம் வைக்கப்பட்டதற்கான பொருண்மைகளோ அதற்கான ஆதரவுகளோ மனுதார்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்ப்படவில்லை. இருந்த போதிலும் மேற்படி ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களாக இருப்பதால், சட்டப்படி சாட்சியமாக ஏற்கக்கூடியது என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக் கோட்பாடாகும். இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 79ல்,

Sec. **79. Presumption as to genuineness of certified copies**. The Court shall presume (to be genuine) every document purporting to be a certificate, certified copy or other document, which is by law declared to be admissible as evidence of any particular fact and which purports to be duly certified by any officer [of the Central Government or of a State Government , or by any officer [in the State of Jammu and Kashmir] who is duly authorized thereto by the Central Government]"

Provided that such document is substantially in the form and pruports to be executed in the manner directed by law in that behalf.

The Court shall also presume that any officer by whom any such document purports to be signed or certified held when he signed it, the official character which be claims in such paper. அதுவும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது.

**2017(1) TNMAC 518 (All) (DB). New India Assurance Co. Ltd. v. Amzad Khan,**
**Section 77 – Indian Evidence Act 1872**

**Document is a public document:** - The document is a public document and the contens of the same were not required to be proved in view of Section 77 of the Evidence Act. எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்திய சாட்சிய சட்டம் பிரிவு, 77 மற்றும் 79ன்படி மேற்படி 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் சட்டப்படி சாட்சியாக ஏற்கக்கூடியது என்றே இந்நீதிமன்றம்

கருதுகிறது.

6) மேலும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதோ அல்லது குறியீடு செய்வதால் மட்டுமே நிரூபணம் ஆகாது என்பதும், வழக்கு தரப்பினர்கள் தாக்கல் செய்யும் ஆவணங்களை அதனை ஏற்கும் நிலையிலே தள்ளுபடி செய்யக்கூடாது என்பதும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் அடியிற்கண்ட வழக்கில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1) "Sundram Dyna cast Pvt ltd (vs) Roas contmls case which was reported in 2011(2) LW 56(Mad) filing of document Rejection of mere filling of document would not bar responds from questioning admissibility of resolution hence admissibility or veracity of document cannot be gone into at inception stage. Therefore order of court rejecting filling of document unjustified."

2) "Murugesan (vs) Arumugam case reported in 2017 (4) MLJ 594, the Hon'ble court of Madras held that, The evidence produce by a party cannot be shutdown at the threshold itself. The court has to decide the genuineness and relevancy of the document only after let in conclusion of the trail by appreciating the evidence by the parties. On such appreciation the court can either accept or reject the same and deliver the judgment."

7) மேலும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் சாட்சியத்தில் உள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்டதாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8) மேற்கண்ட இருதரப்பு வாதுரைகள் மற்றும் பொருண்மைகள் மற்றும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடுகளின்படி மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கு பொருண்மைகளுக்கு தொடர்புடையனவாக இருக்கும் பட்சத்தில் ஏற்கக்கூடியது என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் இம்மனு நடவடிக்கையினால் எதிர்தரப்பினருக்கு ஏற்பட்ட காலம் மற்றும் பொருளாதார இழப்பை நிவர்த்தி செய்யும் பொருட்டு மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.750/- செலுத்துவதின் பேரில் இம்மனு அனுமதிக்கத்தக்கது என தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கு பொருண்மைகளுக்கு தொடர்புடையனவாக இருக்கும் பட்சத்தில் ஏற்கக்கூடியது என்ற நிபந்தனையின் பேரிலும், இம்மனுவினால் மனுதாரர்/பிரதிவாதியால் வழக்கு நடவடிக்கையில் எதிர்மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்டுள்ள காலஇழப்பை ஈடுசெய்யும் பொருட்டு மனுதாரர்/ பிரதிவாதி ரூ.750/- நஷ்ட ஈட்டு தொகையாக 28.10.2020க்குள் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலும் அனுமதிக்கப்படுகின்றது.

பணம் செலுத்தப்பட்டதை நீதிமன்றத்தில் பதிவு செய்வதற்கான கேட்பு நாள் : 29.10.2020

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2020ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//